**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.339/2021**

**Prosecution Witness : 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : ராமராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : வீரப்பன் | **Calling** | : | கூலி வேலை |
| **Village** | : குரும்பப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **67/2026** |
| | | **Dated** | : | **10.02.2026** |

**10.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திரு. ராமராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் தற்போது குறும்பப்பட்டியில் குடியிருந்து கூலி வேலைசெய்துவருகிறேன். எதிரி எனது பேரன். கடந்த 2019ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. எதிரி இரவு வேளையில் குடித்துவிட்டு ரோட்டில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நான் அவரை வீட்டுக்கு அழைத்துச்செல்லும்போது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

31.03.2019ம் தேதி மாலை 05.00 மணிக்கு பாண்டியன் திண்டுக்கல் செல்வதற்காக அவரது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த எதிரி பாண்டியனை அடித்து ஆபாசமாக பேசி கையில் வைத்திருந்த இரும்புக்கம்பியால் தலையில் அடித்து இரத்தகாயம் ஏற்படுத்தினார். நானும் அருகில் இருந்தவர்களும் சத்தம்போட்டு விரட்டிவிட எங்களையும் அடித்து காயப்படுத்தினார். என போலிசார் விசாரணையில் கூறி தற்சமயம் எதிரி பேரன் என்பதால் சமரசம் செய்துகொண்டு நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.10 13:20:40 +0530

Judicial Magistrate No.II
Dindigul.